2009 ஜூலை 3] [திரு. டி. சுதர்சனம்]

ஒரு சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தபோது, அதற்கு பதில் அளித்தபோது, அவர்களுக்கு மாற்று இடம் கொடுக்கப்படும் என்று அறிவித்திருந்தீர்கள். அது அவைக் குறிப்பிலே இருக்கிறது. அரசு உறுதிமொழிக் குழுவிலும் இது இடம் பெற்றிருக்கிறது. அதற்குப் பின்னால் 26-2-2009 அன்றும் இந்த அவையில் விவாதிக்கப்பட்டபோது, அண்ணன் ஆற்காட்டார் அவர்கள் அதற்கு பதில் சொன்னபோது, அவரே மத்திய இரயில்வே இணை அமைச்சரோடு தொலைபேசியில் பேசி, அந்த இடத்திற்கு காலத் தவணை வாங்கிக் கொடுத்தார்கள். கடந்த இரு தினங்களுக்கு முன்னாலே, நான் அமைச்சர் அவர்களைச் சந்தித்து, “ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன், நீங்கள் எப்படியாவது ஏற்பாடு செய்யுங்கள்” என்று உங்கள் பக்கத்திலே உட்கார்ந்து சொல்லியிருக்கிறேன். அப்படியிருக்க, எனக்கு ஒன்றுமே தெரியாது என்று சொன்னால், இது எப்படி இருக்கிறது என்றால், “கும்பகோணத்திற்கு வழி கேட்டால் கொட்டைப்பாக்கு என்ன விலை” என்று சொல்வார்களே, அது மாதிரி இருக்கிறதே தவிர, நியாயமான பதிலாக எனக்குத் தெரியவில்லை. அதனால், உங்களை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்; தயவுசெய்து இதற்கு உடனே ஏற்பாடு செய்யுங்கள், ஏற்பாடு செய்யுங்கள் என்று மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சித் தலைவர் சொன்ன பழமொழியிலே உள்ள தவறைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ‘பட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால் கொட்டைப்பாக்கு விலை எவ்வளவு’; அப்படித்தான் பழமொழி. இதிலே கும்பகோணம் எங்கே வந்தது என்று எனக்குத் தெரியவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்முருகன், பேசுங்கள். தயவுசெய்து மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் எப்போதும் கவன ஈர்ப்புத் தீர்மானங்களை எடுக்கின்றபோது, கவன ஈர்ப்புத் தீர்மானத்தை வாசித்துவிட்டு அதில் யார், யார் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்களோ அவர்கள் பெயரை அழைத்து அவர்களைப் பேச அனுமதிப்பீர்கள்.